மலர் 14 இதழ் 228

NAVAMANI (Tamil Daily) MADRAS

Regd. M. No. 7897

4 பக்கம் 20 காசு விமானப் பதிப்பு 25 காசு

Phone No. 76190, 76199

‘டாட்டா, பிர்லாவின் சலுகைகளை ரத்து செய்’ குசேலர் கோரிக்கை

2-ம் பக்கம்

நவமணி

கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் நடத்தும் ஒரே தமிழ்த் தினசரி

சென்னை 2-5-74 வியாழன்

வெளியூர் 3-5-74 வெள்ளி

எம். ஜி. ஆர். - லதா மோதல்

3-ம் பக்கம்

ரெயில்வே ஸ்டிரைக் தவிர்க்க பேச்சுவார்த்தை தோல்வி

தொழிற்சங்க தலைவர்கள் கைது

புதுடெல்லி, மே. 2—ஜார்ஜ் பெர்னாண்டஸ் உள்பட ரெயில்வே தொழிற்சங்கத் தலைவர்கள் ஏராளமான பேர் நாடு முழுவதும் இன்று விடியற்காலை கைது செய்யப்பட்டனர்.

இந்த மாதம் 8-ந் தேதி நடைபெறுவதாயுள்ள ரெயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை தவிர்ப்பதற்காக டெல்லியில் நடந்த பேச்சு வார்த்தை தோல்வி அடைந்து விட்டது.

தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி விவாதிப்பதற்காக இன்று மக்கள் சபையில் அவசரத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் இன்று விடியற்காலை லக்னோ ரெயில்வே நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

ரெயில்வே நிர்வாகத்திற்கும், ரெயில்வே தொழிற்சங்கங்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிற இந்த சமயத்தில் ரெயில்வே தொழிற்சங்கத் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் கைது செய்யப்பட்டுள்ளது அரசாங்கத்தின் ‘‘அத்துமீறிய செயல்’’ என்று அகில இந்திய ரெயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் பிரிய குப்தா கூறினார்.

டெல்லி நிர்வாகம் பிறப்பித்திருந்த வாரண்டு உத்தரவு பேரில், டெல்லி போலீஸ் அதிகாரிகள் இன்று காலை ஜார்ஜ் பெர்னாண்டசை கைது செய்து டெல்லிக்கு அழைத்து சென்றதாக உத்தர பிரதேச அரசு உள்துறை இலாகா செயலாளர் கூறினார்.

அகில இந்திய லோகோ ஊழியர்கள் தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் பி. கே. பருவா, மற்றும் என். சர்க்கார் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

ரெயில்வே ஸ்டிரைக் தவிர்க்க முடியாததாக இப்போது ஆகிவிட்டது என்று எஸ். எம். பானர்ஜி (எம்.பி) கூறினார்.

மக்கள் சபையில் கண்டனம்

ரெயில்வே தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி இன்று மக்கள் சபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சபையில் கண்டனக் குரல்களும், கூச்சலும் எழுந்தன.

அவசர தீர்மானத்திற்கு அனுமதி

தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி விவாதிப்பதற்காக இன்று மக்கள் சபையில் கொண்டு வரப்பட்ட அவசரத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இந்த தீர்மானத்தை ஜோதிர்மாய் பாசு (மார்க்சிஸ்ட்) கொண்டுவந்தார். இது பற்றி இன்று மாலை 3 மணிக்கு விவாதம் நடைபெறும்.

காங்கிரஸ் தொழிற்சங்க தலைவருடன் பேச்சு

ஐ. என். டி. யு. சி. ஆதிக்கத்தில் உள்ள தேசிய ரெயில்வே தொழிலாளர் சம்மேளனத்தலைவர் ஏ. பி. சர்மா மற்றும் அந்த தொழிற்சங்கத்தின் இதர முக்கியத் தலைவர்கள் ஆகியோருடன் இன்று காலை டெல்லியில் ரெயில்வே மந்திரி எல். என். மிஸ்ரா சிறிதுநேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். போராட்டக் குழுவைச் சேர்ந்த இதர தலைவர்கள் வராததால், பேச்சு வார்த்தையை தள்ளிவைப்பதாக அவர்களிடம் மந்திரி மிஸ்ரா கூறினார்.

போராட்ட கமிட்டி முடிவு

ரெயில்வே தொழிற்சங்கங்கள் ஒருங்கிணைப்புக் கமிட்டியின் போராட்டக்குழு இன்று காலை டெல்லியில் அவசரமாக கூடி முக்கிய ஆலோசனை நடத்தியது. ஜார்ஜ்பெர்னாண்டசும், மற்றும் பல ரெயில்வே தொழிலாளர் தலைவர்களும் கைது செய்யப்பட்டதால், ரெயில்வே மந்திரியுடன் இனி பேச்சு வார்த்தை நடத்துவதில்லை என்று அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (பழைய திட்டத்தின்படி இன்றுகாலை 9-45 மணிக்கு ரெயில்வே மந்திரி எல். என். மிஸ்ராவை தொழிற்சங்கத் தலைவர்கள் சந்திப்பதாயிருந்தது).

சினிமா செய்திகள்

4—ம் பக்கம்

பட்ஜெட் ரகசியம் வெளியாயிற்று?

எம். ஜி. ஆருக்கு புதுவை கவர்னர் எழுதிய கடிதம்

சென்னை, மே 2— பாண்டிச்சேரியில் பட்ஜெட் ரகசியம் வெளியாகவில்லை என்று கவர்னர் சேத்திலால் எம். ஜி. ஆருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்.

மன்னிப்பு கேட்க மாட்டேன்:

தாசிகுலத்தை நான் கேவலமாகப் பேசியதாக இசை வேளாளர்கள் எனக்கு எதிராக மறியல் செய்யப்போவதாக அறிவித்து இருக்கிறார்கள்.

தாசிகுலத்தைப் பற்றி முதலமைச்சர் கருணாநிதி எழுதியிருப்பதை படிக்கிறேன். முதல்வர் எழுதியிருந்தவைகளை எம். ஜி. ஆர் படித்தார்.

இவ்வளவு மோசமாகவா நான் சொன்னேன். இதைச் சொன்ன போது இசை வேளாளர்களுக்கு கோபம் வரவில்லையா?

ராமச்சந்திரன் சொன்ன போது மட்டும் ஆத்திரம் வருவானேன்?

சேலத்தில் நான் என்ன சொன்னேன்? அண்ணாஎழுதிய வாசகங்களைச் சொன்னேன்.

இசை வேளாளர்களும் தமிழ் சேனையும் முதலில் மறியலுக்கு எங்கே போகவேண்டும்? கருணாநிதியின் வீட்டுக்கு அல்லவா போகவேண்டும்.

கருணாநிதி எழுதிய பிறகு தான் ராமச்சந்திரன் பேசினான்? நான் மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

அண்ணா எழுதியவைகளை நான் சொன்னேன். அதற்காக நான் மன்னிப்புக் கோர வேண்டும் என்றால் அது அண்ணாவை அவமானப்படுத்துவது ஆகும்.

என்னை வெட்டிப்போட்டாலும் மன்னிப்புக் கேட்கமாட்டேன். ராமச்சந்திரனிடம் அது நடக்காது.

அப்படி மன்னிப்புக் கேட்பவனாக இருந்தால் பொதுக் குழுவிற்கே போயிருப்பேனே. கணக்குக் கேட்டேன். என்னை டிஸ்மிஸ் செய்தார்கள். நான் அடிமை இல்லை. மனச்சாட்சிப்படி நடப்பவன் என்றார்.

கவர்னர் கடிதம் எழுதி இருப்பது பற்றி நேற்று நள்ளிரவு நடந்த சைதாப்பேட்டைக் கூட்டத்தில் எம். ஜி. ஆர். தெரிவித்தார்.

பட்ஜெட் வெளியாயிற்று என்று சொன்ன தி.மு.க. வும் பழைய காங்கிரசும் முக்காடு போட்டுக்கொள்ளுமா? என்று எம். ஜி. ஆர். கேட்டார்.

எம். ஜி. ஆர். கூறியதாவது:—

பாண்டிச்சேரியில் பட்ஜெட்டைப் படிக்குமுன்பு வெளியாயிற்று என்று சொன்னார்கள். இது பற்றி விசாரணை செய்யுமாறு கவர்னரை நான் கேட்டு இருந்தேன்.

புதுவை கவர்னர் எனக்குப் பதில் எழுதி இருக்கிறார். விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

பட்ஜெட் வெளியாகவில்லை என்று எழுதி இருக்கிறார். புதுவை கவர்னர் கையெழுத்திட்டு அனுப்பிய கடிதம் என்னிடம் இருக்கிறது.

இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? முக்காடு போட்டுக்கொள்ள வேண்டாமா? என்றார் எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆர். பேச்சுக்கு கண்டனம்:

சத்தியா ஸ்டுடியோ முன் மறியல்: பிரபல இசை கலைஞர்கள் பலர் கைது

சென்னை, மே 2—எம். ஜி. ஆரின் சத்தியா ஸ்டுடியோ முன்பு மறியலும் ஆர்ப்பாட்டமும் நடத்திய இசை வேளாளர்கள் இன்று கைது செய்யப்பட்டனர். மறியலில் கலந்து கொண்ட ஏராளமான பெண்களும் கைதாயினர்.

தமிழகத்தின் பல பகுதிகளிலுமிருந்து ஏராளமான இசை வேளாளர்கள் இந்த மறியலில் கலந்து கொள்ள சென்னை வந்திருந்தனர்.

சேலத்தில் நடைபெற்ற தமிழ்நாடு முஸ்லீம் லீக் மாநாட்டில், தாசி குலத்தை எம்.ஜி.ஆர். இழிவாகப் பேசினார் என்றுசெய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

எம். ஜி. ஆரின் அந்தப் பேச்சைக் கண்டித்து, இன்று மறியல் நடைபெற்றது. சுமார் 500 இசைக் கலைஞர்கள் உட்பட 2000 பேர் இதில் கலந்துகொண்டனர்.

குளிக்கரை பிச்சையப்பா, வழுவூர் ராமையா பிள்ளை, வலங்கை மான் சண்முக சுந்தரம், குடந்தை நவநீதம், திருவீழி மிழலை சுப்பிரமணிய பிள்ளை மற்றும் பிரபல கலைஞர்கள் தலைமையில், மறியல் நடைபெற்றது.

மயிலை கபாலீஸ்வரர் ஆலயம் முன்பிருந்து ஊர்வலமாகச் சென்று மறியல் நடத்தினர். ‘‘தமிழர் குலத்தை இழிவுபடுத்திய ராமச்சந்திரனே. மன்னிப்புக் கேள்’’ ‘‘தமிழர்களை இழித்துப் பேசாதே’’ என்பன போன்ற முழக்கங்கள் ஊர்வலத்தில் முழக்கப்பட்டன.

சத்தியா ஸ்டூடியோ முன், ஏராளமான இரும்பு தொப்பி போலீசார் பாதுகாப்புக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

ஊர்வலத்தினர் சத்தியா ஸ்டூடியோ அருகே வந்ததும்; போலீசார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். ஆயினும் போலீசாரின் தடையையும் மீறி ஊர்வலத்தினர் ஸ்டுடியோவை நோக்கி வந்தனர்.

பிறகு ஊர்வலத்தினர் ஸ்டுடியோ வாசல் எதிரே ரோட்டில் அமர்ந்து கொண்டனர்.

சுமார் 11 மணியிலிருந்து அரை மணி நேரம் மறியல்—ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எம். ஜி. ஆர். பேச்சை கண்டித்தும், தமது பேச்சை எம். ஜி. ஆர். வாபஸ்பெற வேண்டும் என்று வற்புறுத்தியும்

4-ம் பத்தி பார்க்க

எம். ஜி. ஆர். மன்னிப்புக் கேட்கவேண்டும்

இன்று நடைபெற்றது அடையாள மறியலே என்றும், எம். ஜி. ஆர். மன்னிப்புக் கேட்கும் வரை இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்றும், கைதாவதற்கு முன் குளிக்கரைபிச்சையப்பா இன்று வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார்.

சென்னையில் இதற்காக ஒரு மாநாடு இன்னும் ஒரு வாரத்தில் நடத்தப்படும் என்றும், அதன் பிறகு போராட்டம் கடுமையாக நடத்தப்படும் என்றும் அந்த அறிக்கையில் அவர் கூறியிருக்கிறார்.

இதற்குத் தமிழக மக்கள் ஆதரவு தரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

படப்பிடிப்பில்

நடிகை லட்சுமி சுருண்டு விழுந்தார்

சேலம், மே 2—நடிகை லட்சுமி படப்பிடிப்பில் நெஞ்சு வலியால் சுருண்டு விழுந்தார்.

மார்டன் தியேட்டர்சாரின் படப்பிடிப்பில் கலந்து கொள்ள லட்சுமி சேலம் சென்றிருந்தார்.

ஜெய்சங்கரும் லட்சுமியும் நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அப்போது திடீரென்று ‘நெஞ்சு வலிக்கிறது’ என்று கூறிய லட்சுமி துடிதுடித்து சுருண்டு விழுந்தார்.

எல்லோரும் பதறிப்போய் உடனடியாக லட்சுமியை சேலம் தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்த்தனர் அங்கே—

லட்சுமிக்கு பிராணவாயு கொடுக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஓரளவு குணமடைந்த பின் படப்பிடிப்பை ரத்து செய்து விட்டு நடிகை லட்சுமி நேற்று சென்னை திரும்பினார்.

சென்னையில் தனியார் மருத்துவமனை ஒன்றில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

2-ம் பத்தித் தொடர்ச்சி

முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதனால் சிறிது நேரத்துக்கு அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

எம். ஜி. ஆர். தமது பேச்சுக்கு வருத்தம் தெரிவிக்கும் வரையில் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்

தடையை மீறியதாக, மறியல் செய்தவர்களை போலீசார் கைது செய்து வானில் ஏற்றிச் சென்றனர்.

காமராஜ் ஆசையில் மண்: எம். ஜி. ஆர். கடும் தாக்கு

சென்னை, மே 2—புதுவையில் அண்ணா தி. மு. க. மந்திரி சபை ராஜிநாமா செய்த பிறகு காமராஜர் மந்திரி சபை அமைக்க நினைத்தார். சட்ட சபையைக் கலைத்துவிட்டதால் அவர் எண்ணத்தில் மண்விழுந்து விட்டது என்று எம். ஜி. ஆர். தெரிவித்தார்.

நேற்று நள்ளிரவு சைதாப் பேட்டையில் நட[illegible] அண்ணா சிலை திறப்பு விழ[illegible] கூட்டத்தில் எம். ஜி. ஆர். பேசும் போது இது பற்றி குறிப்பிட்டார்.

சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி எதிரே அண்ணாசிலையை எம்.ஜி.ஆர். நேற்று இரவு திறந்து வைத்தார்.

அந்தக் கூட்டத்தில் மாயத் தேவர், கே. ஏ. கிருஷ்ணசாமி, முனுஆதி, ராகவானந்தம் ஆகியோர் பேசினார்கள்.

எம். ஜி. ஆர். பேசுகையில் உங்களுடைய ஆர்வம், உற்சாகம், ஏற்றம் எழுச்சியைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சிக்குப் பதில் கவலை தான் ஏற்படுகிறது.

அண்ணா தி. மு. கழகத்தை நீங்கள் நம்பி இருக்கிறீர்கள், ஏதோ செய்யப்போகிறோம், பெரிய மலர்ச்சியை உண்டாக்கப் போகிறோம் என்று நம்பி இருக்கிறீர்கள்.

எப்படி அதை நடத்திக் காட்டப் போகிறோம் என்ற கவலை இருக்கிறது.

ராமச்சந்திரன் என்ன சொல்கி[illegible]ன்? அண்ணா தி. மு. கழகம் [illegible]ன்ன சொல்கிறது என்று இந்தியத் துணைக்கண்டம் கவனிக்கிறது. உன்னிப்பாக கவனித்து வருகிறது.

ஆனந்த விகடன் மணியம் ஒரிசா சென்று இருந்தார். பட்நாயக் அவருடன் 3 மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

அதில் $1\frac{1}{2}$ மணிநேரம் ராமச்சந்திரனைப் பற்றியே கேள்விகளைக் கேட்டு இருக்கிறார். என்ன பொருள்?

ராமச்சந்திரன் இத்தனை காலமும் இருந்து இருக்கிறான். இப்போதுதான் பிறக்கவில்லை தி மு கழகத்தில் இருந்த போது என்னைப்பற்றிக்கேட்கவில்லை.

அப்போது என்னிடம் பொறுப்பு இல்லை. கருணாநிதியிடம் பொறுப்பை ஒப்படைத்தோம்.

கட்சித் தலைவர். ஆட்சியின் முதல்வர் இரண்டு பொறுப்புக்களும் கருணாநிதியிடம் இருக்கவேண்டும் என்று நான் சொன்னேன்.

நெடுஞ்செழியனும் மற்றவர்களும் என்மீது ஆத்திரப் பட்டார்கள். கட்சியும், ஆட்சியும்இணைந்து இருந்தால்தான் பிடிப்பு இருக்கும். அண்ணா இல்லாத நிலையில் பிளவு வளரக்கூடாதுஎன்றஎண்ணத்தில் அதைச் சொன்னேன். எனக்குப் பதவி கேட்டுப் பேரம் பேசினேனா?

அண்ணா தி. மு. கழகம் தவிர வேறு கட்சியினால் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று மக்கள் நம்புகிறார்கள்.

அதன் விளைவுதான் கருணாநிதிக்கும், தி. மு. கழகத்திற்கும் ஆவேசம் வருகிறது. ஆத்திரம் வருகிறது.

தமிழ் நாட்டில் இரண்டு கருணாநிதிகள் இருக்கிறார்கள். ஒருவர் காமராஜ். மற்றொருவர் கருணாநிதி.

1967-ம் ஆண்டு காமராஜரை வெளியேற்றி அவருக்கு அண்ணா ஓய்வு அளித்தார்.

இப்போது அண்ணா தி. மு. கழகம் கருணாநிதிக்கு ஓய்வு கொடுத்து வெளியேற்ற இருக்கிறது.

அதனால்தான் காமராஜரும், கருணாநிதியும் அண்ணா தி.மு.க.வை தாக்குகிறார்கள்.

ராணுவப்போரில் கிடுக்கித் தாக்குதல். இரு முனைத் தாக்குதல் என்று சொல்லுவார்கள். அப்படி இருவரும் அண்ணாதி.மு.க.வை தாக்குகிறார்கள்.

ஆனால் மக்கள் ஏமாறவில்லை. இந்திராவும், காமராஜரும் ஏமாந்து இருக்கிறார்கள்.

பாண்டிச்சேரியில் அந்த இரண்டு கருணாநிதிகளும், அவர்களின் அன்புத் தம்பிபருக்கும் சேர்ந்து சட்டசபையில் தீர்மானத்தை தோற்கடித்தார்கள்.

ஜனநாயகத்தை மதித்து அண்ணா தி. மு. கழகம் ராஜிநாமா செய்தது. தேர்தலை நடத்துங்கள் என்று சொன்னது.

பிரதமர் இந்திரா காந்தி பண்போடு சட்டசபையைக் கலைத்தார்.

காமராஜர் நினைத்தார். அண்ணா தி. மு. க. அமைச்சரவை ராஜிநாமா செய்ததும் பணஆசைக்காட்டி பதவி ஆசைக்காட்டி இவரை இழுத்து மந்திரி சபை அமைக்கலாம் என்று நினைத்தார்.

காமராஜர் எண்ணத்தில் மண் விழுந்தது. நாம் சிரித்துக்கொண்டு இருக்கிறோம் என்றார் எம் ஜி ஆர்.

என்னை மலையாளி என்றாலும், பஞ்சாபி என்றாலும், வங்காளி என்றாலும் நான் தமிழன். அண்ணாவின் தம்பி என்று எம்.ஜி.ஆர். சைதாப்பேட்டை கூட்டத்தில் தெரிவித்தார்.

2-ம் பத்தி தொடர்ச்சி

தினம் ஓர் ஆணையை—ஒரு நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார் முதல்வர். இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த ஆட்சி இப்படி நடந்து கொண்டிருக்கிறது ?

குசேலரின் பாராட்டு

தி.மு.கழகத்தை கண்டதுண்டமாக வெட்டிப் போட வேண்டும் என்ற மனப்பான்மை கொண்ட குசேலரே தி.மு.க. அரசின் நடவடிக்கையை பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டிருப்பதை நீங்களெல்லாம் பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள்.

காட்டூர் கோபால் செய்த ஒப்பந்தத்தை விட வேறு என்ன புதிதாக சிம்சன் தொழிலாளர்களுக்கு அவர்கள் பெற்றுத்தர முடிந்திருக்கிறது?

தி.மு.க. ஆட்சி எந்தப் பிரச்னையிலும் கட்சி பாகுபாடு பார்ப்பதில்லை. வேலை இழந்த சிம்சன் தொழிலாளர்களுக்கெல்லாம் மீண்டும் வேலைகிடைக்க இருக்கிறது. அவர்களெல்லாம் தி மு கழகத்தைச் சேர்ந்தவர்களா?

பின்னி கம்பெனி நிர்வாக இயக்குநரான பட் என்பவர், இந்தியா முழுவதிலும் சுற்றி விட்டு, பிரதமர் இந்திரா காந்தியையும் சந்தித்து விட்டு வந்திருக்கிறார். மனந்திறந்து நமது அரசைப்பற்றி பாராட்டி இந்திரா காந்தியிடமும் சொல்லி விட்டு வந்திருக்கிறார்.

"[illegible]நியா முழுவதிலும் சுற்றி[illegible] பார்த்து விட்டேன். எந்த மாநிலத்திலும் நிம்மதி இல்லை; அமைதி இல்லை; தொழில்கள் நல்லபடியாக நடக்கவில்லை. தமிழ்நாட்டில்

3-ம் பக்கம் பார்க்க

தாளம் தவறி, ராகம் குளறி:
சுருதிவிட்டு கூவும் சமதர்ம சங்கீதம்: கருணாநிதி வர்ணனை

சென்னை, மே. 2—'சமதர்ம சங்கீதம் பாடுவோர், தாளம் தவறி, ராகம் குளறி, சுருதிவிட்டுக் கூவிக்கொண்டிருக்கிறார்கள்' என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

மே தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் குறிப்பிட்டுள்ளதாவது:—

உழைக்கும் தோழனின் மே தினக்குரல், உலகெங்கும் எட்டியது. அந்தக் குரலை தமிழகத்தில் ஒலிக்கச் செய்த பெருமை, பெரியாருக்கே உண்டு!

பேரறிஞர் அண்ணா மே தினத்தின் சிறப்புக்களை, மேடைகளில்-ஏடுகளில் எழுச்சிமிகு தமிழாலே எத்தனையோ முறை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நமது அரசு அமைந்ததும் மே தினத்திற்குவிடுமுறையை அறிவித்தது. "இது தொழிலாளர் நல அரசு" என்று அண்ணா அடிக்கடி சுட்டிக் காட்டினார் ஆதாரங்களோடு.

அவர் வழிநின்று நாம் தொழிலாளர்க்கு, அரசு அலுவலாளர்க்கு ஆற்றிடும் பணிகள் ஆயிரம்! ஆயிரம்!

இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின் வாயிலாக நன்மை வழங்கியது நமது அரசுதான்.

உலகில் சில நாடுகளில் கூறப்படுவதும், இந்தியாவில் வேறெங்குமே இல்லாததுமான அரசுத் துறையில்; தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு—முதலீட்டில் பங்கு—என்ற நிலையை நடைமுறைப்படுத்தியிருப்பதும் நமது அரசுதான்.

அரசுத்துறையில்-குறிப்பாகப் போக்கு வரத்துறையில் முப்பத்து ஐயாயிரம் தொழிலாளர்களுக்குப் பயன் தரும் ஓய்வூதியம் தரப்படுமென்ற சலுகையும் நமது தமிழக அரசிலேதான் வழங்கப்படுகிறது.

எந்த மாநிலத்திலே, ஆலைகள் மூடப்பட்டதால் அவதியுற்ற தொழிலாளர்களுக்கு ஆறு லட்ச ரூபாயை நிவாரணமாக அள்ளிக் கொடுத்தார்கள் அரசின் சார்பில், நம்மைத் தவிர?

தொழிலாளர் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைப்பதில் நாம் காட்டும் அக்கறை அளவிடற்கரியதா?

நமது தொழிலாளர் நல அமைச்சர், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் அல்லும் பகலும் அயராமல் உரையாடி, பிரச்சினைகளை முடிவு கட்டும் பாங்கினைப் பாராட்டாதார் யார்?

உதட்டாலே சோஷலிசத்தை உச்சரித்துக்கொண்டு, உலவுகின்றார் சில தலைவர்கள் நாட்டில். அவர்களை ஏற்றிப் போற்ற ஏடுகள் உண்டு. நாம் அந்த "நாமாவளி"களுக்காக ஏங்கித் தவிக்காமல் தொழிலாளிக்குத் தேவையான மேன்மை மிகு கடமைகளை ஆற்றி, மேதினத்தன்று நிமிர்ந்து நிற்கிறோம்.

சமதர்ம சங்கீதம் பாடுவோர், தாளம் தவறி, ராகம் குளறி, சுருதிவிட்டுக் கூவிக் கொண்டிருக்கிறார்கள்.

சாரீரம், லயம் எதுவுமில்லாதவனை 'சங்கீத பூஷணம்' என்பதுபோல், சிலரைச் 'சமதர்மத் [illegible]ர்"கள் என்று வர்ணிக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்து நாம், மெல்லச் சிரிப்போம், மே தினத்தில் சபதமெடுப்போம்.

"உறவுக்குக் கை
கொடுப்போம்;
உரிமைக்குக் குரல்
கொடுப்போம்"

என்பது மத்திய — மாநில உறவு பற்றிய முழக்கம் மட்டுமல்ல; அனைத்துக்கும் பொருந்தும்! தொழிலாளர் சமுதாயத்துக்கும் பொருந்தும்.

இவ்வாறு கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

தொழிலமைச்சர் மாதவன்-தொழிலாளர் சந்திப்பு

பூந்தமல்லி, மே. 2—பூந்தமல்லிக்கருகில் உள்ள செம்பரம்பாக்கம் என்ற கிராமத்தில் உள்ள அரசாங்க செங்கல் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களை அமைச்சர் மாதவன் திடீர் என்று சந்தித்தார். இந்த சந்திப்பின் போது தி.மு.க. எம்.எல்.ஏ. ராஜர[illegible]தினம் உடன் இருந்தார்.

தொழிலாளர்களை சந்தித்த மாதவன் தொழிலாளர்களுக்கு ரூ. 48லிருந்து 90 ரூ. வரை ஊதியம் உயர்வு அளிப்பதாக அறிவித்தார்.

இந்த சந்திப்பிற்கு தி.மு.க. எம். எல். ஏ. ராஜரத்தினம் ஏற்பாடு செய்திருந்தார். பிறகு தொழிற்சாலையை அமைச்சர் சுற்றிப் பார்த்தார்.

அ.தி.மு.க. மீது கடும் தாக்கு

அறியாதவர்களை நம்பும் 'அப்பாவி' தொழிலாளர்: ராசாராம் பேச்சு

சென்னை, மே. 2—அறியாமையில் ஆழ்ந்தவர்கள் அண்ணா பெயரால் கட்சி நடத்துகிறார்கள். அவர்களை நம்பி அறியாமைக்கு ஆட்பட்ட அப்பாவி தொழிலாளர்கள் அங்கு போயிருக்கிறார்கள் என்று அமைச்சர் ராசாராம் கூறினார்.

நேற்று மாலை சென்னை கடற்கரையில் நடந்த மேதின விழாப் பொதுக் கூட்டத்தில் தொழிலாளர் அமைச்சர் ராசாராம் பேசியதாவது:—

இந்த நாட்டில் தபால் துறை ஊழியர்களுக்கென ஏராளமான சங்கங்கள் இருக்கின்றன. தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இதுவரை தபால் ஊழியர்[illegible]ருவருக்கு நாடாளுமன்றத்[illegible] பதவி பெற்றுக் கொடுத்தது உண்டா? திராவிட முன்னேற்றக் கழகம்தான், ஜி. லட்சுமணன் என்கிற தபால் துறை ஊழியரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறது. வேறு எந்தக் கட்சி யாவது இதைச் செய்திருக்கிறதா?

பேச்சும் காரியமும்

மற்ற கட்சிக்காரர்கள் பேசுவார்கள்; காரியம் ஆற்ற மாட்டார்கள். தி. மு. க. பேசுகிறது; காரியம் ஆற்றுகிறது.

மே தின விழாவை, தி. மு. கழகமாக இருக்கும் இப்போதுமட்டுமல்ல; திராவிடர் கழகமாக, சுயமரியாதை இயக்கமாக, ஜஸ்டிஸ் கட்சியாக இருந்தகாலத்திலிருந்தே நாம் போற்றி பாராட்டி வந்திருக்கிறோம். நமது பகுத்தறிவாளர் பாசறையில்சுயமரியாதைச் சுடரொளியாகதிகழ்ந்த சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலர்தான் முதன் முதலில் மே தின விழாவைக் கொண்டாடி அகில இந்தியாவுக்கும் வழிகாட்டினார். இதை நான் சொல்லவில்லை; வலதுசாரி கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவரான ஏ. எஸ். கே. ஐயங்காரே இப்படி எழுதியிருக்கிறார்.

தொழிலாளரின் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அதை திமுக அணுகும் முறை மிகப் பிரமாதமாக இருக்கிறது என்று பல கட்சித் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பு பின்னி கம்பெனியில் அந்தத் தொழிலாளர்கள் நடத்திய பாராட்டுக்கூட்டம் ஒன்றில் அந்தோனிபிள்ளை, காங்கிரஸ் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த மணிவர்மா, நாராயணன், அப்பன்ராஜ், ஆகியவர்களெல்லாம் மேடையில் என்னை வைத்துக் கொண்டு இதைச் சொல்லி பாராட்டினார்கள். ரகசியக் கூட்டத்தில் கூட அல்ல; வெட்டவெளியில் மைதானத்தில் நடந்தகூட்டத்தில் மனம் விட்டுப் பாராட்டியிருக்கிறார்கள்.

நீலகிரியில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தின் முதலாளி எங்கோ ஓடிவிட்டார். தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க ஆள் இல்லை. இருபது நாளாக பட்டினியாக வாடினார்கள். நான் அப்பொழுது ஒரு குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நீலகிரி சென்றிருந்தேன். என்னிடம் அவர்கள் முறையிட்டார்கள். நான் குழுக்கூட்டத்தை நிறுத்தி வைத்துவிட்டு உடனே அங்கிருந்து முதல்வருடன்தொலைபேசியில் தொடர்புகொண்டேன். உடனே முதல்வர் 5 ஆயிரம் ரூபாயை தந்திமணியார்டரில் அனுப்[illegible] மாவட்ட கலெக்டர் மூலம் அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடி உதவிகளைச் செய்ய ஏற்பாடு செய்தார். ஏறக்குறைய 300 தோட்டத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் கிடைத்தது.

எந்த அளவுக்கு தொழிலாளர்களிடத்திலே இரக்கமும் பாசமும் காட்டி முதல்வர் செயலாற்றி வருகிறார் என்பதற்கு இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சொல்லலாம்.

சிம்சன் பிரச்சினையில் இரண்டு ஆண்டுகளாக பல சங்கடங்களையெல்லாம் தாங்கிக் கொண்டோம். அதை அகில இந்தியப் பிரச்சினை ஆக்கினார்கள். மத்திய மந்திரியாக இருந்த மோகன் குமாரமங்கலம் இங்குவந்து காட்டூர் கோபால் ஏதோ தவறு செய்துவிட்டதாக சொன்னார். 'கருணாநிதி ஒழிக' என்றுதொழிலாளர்கள் முழக்கமிட்டார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களின் அறியாமையைப் பற்றி கவலைப் படாமல் யாராலேயோ அவர்கள் ஏமாற்றப் படுகிறார்கள் என்பதை மனதில் கொண்டு, நேற்றைய

4-ம் பத்தி பார்க்க

பழைய காங்கிரஸ் அ. தி. மு. க. மோதல்: 4 பேர் கைது

சென்னை, மே 2—சென்னையை அடுத்த தாம்பரத்தில் பழைய காங்கிரஸ் அ. தி. மு. க. ஊழியர்கள் இடைவே பயங்கர மோதல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பழைய காங்கிரஸ் ஊழியர்களைத் தாக்கியதாக அ. தி. மு. க வைச் சேர்ந்த 4 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இந்த மோதல் நேற்றிரவு நடந்தது. இதனால் தாம்பரத்தில் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது.

மோதலைத் தொடர்ந்து தாம்பரத்தில் பலத்தபோலீஸ் காவல் போடப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. எம். எல். ஏ. கேரோ

அ. தி. மு. க. ஊழியர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அ தி மு க. எம். எல். ஏ.வான முனுஆதி தாம்பரம் போலீஸ் நிலையத்துக்கு வந்துகொண்டிருந்தார் அப்போது பழைய காங்கிரஸ் தி. மு. க. ஊழியர்கள்[illegible]முனு ஆதியின் காரை கேரோ செய்து அ. தி. மு. க. வுக்கு எதிராகக் கண்டனக்கோஷங்களைக் கிளப்பினர்.

கண்டனக் கூட்டம்

மோதல் பற்றிக் கூறப்படுவதாவது:—பழைய காங்கிரஸ் ஊழியரை அ.தி.மு.க.வினர் தாக்க முயற்சித்ததாகக் கூறி பழைய காங்கிரஸ் கட்சியினர் 30-ந் தேதி மாலை ஒரு பொதுக்கூட்டம் நடத்தினர், கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது திடீரென குழப்பம் ஏற்பட்டது. அ.தி.மு.க.வினர் இவ்விதம் குழப்பம் ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

அ. தி. மு. க. கூட்டம்

இதைத் தொடர்ந்து [illegible]ற்று புதன்கிழமை அ. தி. மு. க. வினர் பதிலுக்கு ஒரு கண்டனக் கூட்டம் நடத்தினர். கூட்டம்நடந்துகொண்டிருந்தபோது அ. தி. மு. க. ஊழியரை பழைய காங்கிரஸ் காரர்கள் அடித்துவிட்டதாகச் செய்தி கிளம்பியது.

உடனே அ.தி.மு.க. ஆதரவாளர்கள்அங்கிருந்து கிளம்பி ஓடினர்.

மோதல்

இதைத் தொடர்ந்து காமராஜ் பஜாரும் முத்துரங்க முதலி தெருவும் சந்திக்கும் இடத்தில் பழைய காங்கிரஸ்—அ.தி.மு.க. ஊழியர்கள் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் கந்தன் (தி.மு.க.) அண்ணாமலை (பழைய காங்கிரஸ்) அமீர் பாஷா (பழைய காங்கிரஸ்) கங்காதரன் (பழைய காங்கிரஸ்) சங்கரன்(பழைய காங்கிரஸ்) ஆ[illegible] 5 பேரும் காயமடைந்தனர்.

இவர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாகப் போலீசில் புகார் செய்யப்பட்டது இதன் பேரில் போலீசார் சந்திரன், இளங்கோ, லோகுசாமி, கிரி ஆகிய நான்கு பேரையும் நேற்றிரவு 1-30 மணிக்கு கைது செய்துள்ளனர். இந்த 4 பேரும் அ. தி. மு. க.வைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

நீர் மட்டம்

சென்னை, ஏப். 27—

மேட்டூர்	5·36மீட்டர்
பெரியாறு	2·45 ,,
வைகை	17·71 ,,
பாபநாசம்	21·61 ,,

7-ம் பத்தித் தொடர்ச்சி

ஆதரவு தருவோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

வேலை நிறுத்தம் செய்து ரெயில் போக்குவரத்து பாதிக்குமானால் 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப் படும் என்று மத்திய அரசு சட்டம்போட்டுள்ளது.

வேலை நிறுத்தம் என்றுகாரணம் காட்டி, இன்றைக்கு 300 ரெயில்களை ரத்து செய்திருக்கிறாரே, ரெயில்வே அமைச்சர் மிஸ்ரா. அவருக்கு எத்தனை ஆண்டு சிறைத் தண்டனை விதிப்பது என்று சிந்தன் கேட்டார்.

இறுதியில் சிம்சன் தொழிற் சங்கத் தலைவர் குசேலர் பேசினார். அவர் பேசியதாவது:-

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏ. ஐ. டி. யு. சி.யையும், சி. ஐ. டி. யு.வையும் ஒரே மேடையில் இணைய பாதை வகுத்தது உழைக்கும் மாமன்றமே என்பதில் பெருமை அடைகிறேன்.

தொழிலாளர்கள் போராட்டம் மூலமே வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். இன்னும் 10 நாட்களுக்குள் பின்னி நிர்வாகம், கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லையென்றால், பின்னி ஆலை முற்றுகை[illegible]ப் படும் என்று எச்சரிக்கி[illegible]ன்.

ரெயில்வே தொழிலாளர்கள் சம்பள உயர்வுகேட்டால் ஏது பணம் என்கிறார்கள்.

டாட்டாவுக்கும் பிர்லாவுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகையை ரத்து செய்தாலே, தொழிலாளர்கள் கேட்கும் சம்பளத்தை கொடுக்க முடியும். ஆண்டு ஒன்றுக்கு 200[illegible]00 கோ[illegible] ரூபாய் சலு[illegible]ாகத் தரப்படுகிறது. இதை ரத்து செய்து தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு தரவேண்டும்.

இவ்வாறு குசேலர் பேசினார்.

குசேலர் கோரிக்கை

டாட்டாபிர்லாவின் சலுகைகளை ரத்து செய்ய வேண்டும்

சென்னை, மே 2—ரெயில்வேயில் டாட்டாவுக்கும், பிர்லாவுக்கும் கொடுக்கப்பட்டு வரும் சலுகைகளைக் குறைத்தால், ரெயில்வே தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு தரலாம் என்று சிம்சன் தொழிற்சங்க தலைவர் குசேலர் கூறினார்.

உழைக்கும் மக்கள் மாமன்றச் சார்பில் சென்னை, கண்ணப்பர் திடலில் நேற்று மே தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு சென்னை தொழிலாளர் யூனியன் கவுன்சிலைச் சேர்ந்த பி. எஸ். ரங்கராஜன் தலைமை வகித்தார்.

அவர் பேசுகையில் சிம்சனில் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருந்த 122 தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலையளிக்க முதலமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

சி. ஐ. டி. யு.யைச் சேர்ந்த சவுந்தரராஜன் பேசுகையில் 1959 வரையிலான 60ஆண்டுகளில் விலைவாசி 32 சதவிகிதம்தான் [illegible]யர்ந்திருக்கிறது என்றும், ஆனால் இந்திரா ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் விலைவாசி 60 சதவிகிதம் உயர்ந்துவிட்டிருக்கிறது என்றும் புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்தார்.

ஏ. எஸ். கே.

ஆர்பர் தொழிற்சங்கத் தலைவர் ஏ. எஸ்.கே. அய்யங்கார் பேசுகையில் தொழிலாளர்களுக்குகடவுள் நம்பிக்கையிருக்கக்கூடாது. அப்போது தான் எல்லோரும் ஒருகுலம் என்ற உணர்வு ஏற்படும் என்று கூறினார்.

நாட்டில் புரட்சி வெடிக்கக் கூடிய காலம் வந்துவிட்டது என்பதன் அடையாளமே,எல்லோரும் ஒன்றுபட்டு நடத்தும் இந்த மே விழா பொதுக் கூட்டம் என்று ஏ. எஸ். கே. கூறினார்.

சிம்சன் நிறுவன குமஸ்தாக்கள் சங்கத்தைச் சேர்ந்தராஜகோபால் பேசுகையில்தொழிலாளர்களிடையே ஒற்றுமை இருந்தால் ரத்தம் சிந்தாமலேயே வெற்றிபெற முடியும் என்று கூறினார்.

நாட்டுக்கு அவமானம்

ரெயில்வேயைச் சேர்ந்த நமச்சிவாய[illegible] பேசுகையில் 1886-ல் [illegible] மணி நேர வேலைக்காக சிகாகோவில் தொழிலாளர்கள் ரத்தம் சிந்திய நாள் மே 1. அந்த 8 மணி நேர வேலைக்காக இன்னும் ரெயில்வே தொழிலாளர்கள் போராடி வருவது நாட்டுக்கே அவமானம் என்று கூறினார்.

ஏ ஐ டி யு சியைச் சேர்ந்த ஏ. எம். கோபு பேசுகையில் தொழிலாளர் போராட்டத்தைத் திசை திருப்பவே தமிழன—மலையாளி பிரச்சினை கிளப்பி விடப்பட்டிருப்பதாகக் கூறினார்.

உயிரைக் கொடுத்தாவது படிப்பட்ட பிரச்சாரத்தை முறியடித்து தமிழர்களின் பண்பைக் காப்போம் என்று சபதம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அரசியல் சட்டத்தை கொளுத்த வேண்டும்

அனைவருக்கும் வேலைசெய்ய உத்தரவாதம் தரத் தவறிய அரசியல் சட்டத்தை கொளுத்தவேண்டும் என்று சிம்சன் துணைத் தலைவர் வி. பி. சிந்தன் கூறினார்.

ரெயில்வே தொழிலாளர் போராட்டத்துக்கு முழு

5-ம் பத்தி பார்க்க

ஒரே மேடையில் ஏ.ஐ.டி.யூ.சி. சி. ஐ. டி. யூ.

நேற்று நடந்த மே தின விழாப் பொதுக்கூட்டத்தில், ஏ. ஐ. டி. யு. சி. யும், சி. ஐ. டி. யு. வும் ஒரே மேடையில் கலந்து கொண்டன. கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதுதான் இந்த இரண்டு சங்கங்களும் ஒன்றாகக் கலந்து கொள்கின்றன.

நேற்றைய ஊர்வலத்திலும், கூட்டத்திலும் ரெயில்வே, ஆர்பர், எல்.ஐ.சி. பாங்கி தொழிற்சங்கங்கள் உட்பட சுமார் 100க்குமேற்பட்ட சங்கங்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஒற்றுமை உணர்வை கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் பாராட்டிப் பேசினர்.

இந்தி கவர்ச்சி நடிகை ஒப்பந்தம்

எம்ஜிஆர்–லதா மோதல்



சென்னை, மே 2— எம். ஜி. ஆருடன் இந்தி பட உலகின் கவர்ச்சி நடிகை ராதாசலூஜா நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இவர் 'தோரஹா' படத்தில் அரை நிர்வாண கோலத்தில் நடித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர். இந்த இந்தி நடிகை ஒப்பந்தம் செய்யப்பட்டதன் காரணமாக எம். ஜி. ஆர்—லதா இருவருக்கிடையில் பெரும் மோதல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.



''தோ-ரஹா'' இந்திப் படத்தின்மூலம் இந்திப் பட உலகத்திற்கு அறிமுகமானவர் ராதா சலூஜா.

இவர், அரை நிர்வாண கோலத்தி[illegible]ளிக்கும் காட்சியில் மெல்[illegible] சிறிய துண்டு ஒன்றைக் கட்டிக்கொண்டு கட்டான உடலை கவர்ச்சியாகக் காட்டி அந்தப் படத்தில் நடித்துள்ளார். இதன் மூலம் இந்திப்பட உலகின் கவர்ச்சிக் கன்னி ராதா சலூஜா என்று பத்திரிக்கைகளாலும், ரசிகர்களாலும் அவர் வர்ணிக்கப்பட்டார். தொடர்ந்து அவர் பல படங்களில் பளிங்கு உடலை ரசிகர்கள் பார்வைக்கு விருந்தாக்கி நடித்துள்ளார்.

நடிகை ராதா சலூஜா அளித்துள்ள பேட்டி ஒன்றில் கூறிஇருப்பதாவது;

'நிர்வாணக் காட்சிகளைத் திரைபடங்களில்புகுத்துவதன் மூலம் இந்தியநாட்டுத்திரைப் படங்களின் மதிப்பை வெகுவாக கெடுத்துவிட்டார்கள்.

எம்.ஜி.ஆருடன் நடிப்பார்

''தோரஹா'' படம்என்னை சிறந்த நடிகையாக திரைப் பட உலகில் உயர்த்தினாலும் அதைப்பற்றிய விளம்பரங்கள் உயர்ந்த முறையில் அமையவில்லை.

வெறும் இந்தி நடிகை என்ற நிலைமையைத் தொடராமல் பல மொழிப் படங்களிலும் நடிக்க விரும்புகிறேன்.

எனது தாய்மொழியான பஞ்சாபில் நான் சிறப்புடன் நடித்திருக்கிறேன்.

நான் தமிழை சரளமாக மிகவும் நன்றாகப் பேசுவேன். பிரபல தமிழ் நடிகர் எம். ஜி. ஆருடன் கதாநாயகியாக தமிழ்ப் படத்தில் நடிக்கவும் ஒப்பந்தமாகியுள்ளேன்.

இவ்வாறு ராதா சலூஜா ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

லதா கதி என்ன?

ராதா [illegible]ஜாவின் பேட்டி ஒரு ஆ[illegible]ல வார இதழில் வெளிவந்துள்ளது. எம். ஜி. ஆர். ஆப்பிரிக்காவுக்கு சென்றபோது விமான நிலையத்தில் அவருக்கு தமிழ் நடிகை ஜெயசுதா மாலை அணிவித்து வழியனுப்பியதும் அதைத் தொடர்ந்து ஜெயசுதா எம். ஜி. ஆருடன் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் என்று செய்தி வெளி வந்ததும் தெரிந்ததே. இது குறித்து ஜெயசுதா தரப்பில் கேட்கப்பட்டபோது எம். ஜி. ஆர். படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்ய அவர்கள் கேட்டது உண்மைதான் என்றும், இதனால் மற்ற படங்களில் அதிகமாக நடிக்க முடியாது என்று எம். ஜி. ஆர். படங்களில் நடிக்க ஜெயசுதா மறுத்து விட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தச் செய்திகள் யாவும் அறிந்த நடிகை லதா மிகவும் மனம் வருந்துவதாத் தெரிகிறது.

பானுமதி முதல் மஞ்சுளா வரை

எம். ஜி. ஆருடன் மலைக்கள்ளன், தாய்க்குப்பின் தாரம் போன்ற பல படங்களில் நடித்த பானுமதி 'நாடோடி மன்னன்' படத்திற்குப்பின் அவருடன் நடிக்கவில்லை. அதைப்போலவே சரோஜா தேவி படங்களில் எம். ஜி. ஆருடன் இணைந்து நடித்தார் அதன் பின்னர் ஜெயலலிதா பல படங்களில் ஜோடியாக எம். ஜி. ஆருடன் நடித்தார். பின்னர் மஞ்சுளா 'ரிக்ஷாக்காரன்' படத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு சில படங்களில் நடித்தார். அவருக்குப்பின் லதா ''உலகம் சுற்றும் வாலிபன்'' படத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டார். இப்போது எம் ஜி. ஆருடன் ''யாரையும் அழவைக்காதே'', சிரித்து வாழவேண்டும்'', ''மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்'', ''இதயக்கனி'' போன்ற பெரும் பாலான படங்களில் லதா தான் கதாநாயகியாக நடிக்கிறார்.

ஒதுக்கும் முயற்சி

ஆனால், இனிமேல் வரும் படங்களில் தொடர்ந்து எம். ஜி. ஆருடன் இணைந்து நடிக்க முடியுமா? இல்லை பானுமதி, சரோஜாதேவி, ஜெயலலிதா மஞ்சுளா வரிசையில் தானும் சேர்க்கப்பட்டு ஒதுக்கப்பட்டு விடுவோமோ. என்று அவர் அஞ்சுவதாகத் தெரிகிறது.

ஜெயசுதாவை நடிக்க ஒப்பந்தம் செய்ய முயற்சித்ததும் இந்திக் கவர்ச்சி நடிகை ராதா சலூஜாவை ஒப்பந்தம் செய்திருப்பதும் தன[illegible] எதிராக எம். ஜி. ஆர். எடுத்திருக்கும் நடவடிக்கை என்று நடிகை லதா கருதுவதாகத் தெரிகிறது.

சிவாஜி கணேசன்

இடையில் இவ்வாறு எதிர்காலத்தைப் பற்றி என்ன ஆகுமோ என்ற அச்சத்தின் காரணமாக சிவாஜி கணேசனிடம் அணுகி சில படங்களில் அவருடன் நடிக்க ஒப்பந்தமாகி நடித்தார்.

மற்ற நடிகர்களுடன் சேர்ந்து சில படங்களில் நடித்தார்.

இப்போது மீண்டும் லதாவுக்கு அத்தகைய ஒரு நெருக்கடியான நிலமை ஏற்பட்டிருக்கிறது என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது.

நடித்து வருகின்ற படங்களோடு சரி; இனி புதிய படங்களில் மற்ற நடிகைகளுக்கு வாய்ப்புக் கொடுத்து தன்னை எம். ஜி. ஆ'. ஒதுக்கி விடுவார் என்று நடிகை லதா அஞ்சுவதாகத் தெரிகிறது;

சந்திக்கத் தயார்

எது எப்படி இருந்தாலும் தனக்குத் திறமையிருப்பதனால் தமிழ்த் திரையுலகில் நீடித்து நிற்க முடியும் என்ற திடமான நம்பிக்கையுடன் வருவதை சந்திக்க லதா தயாராக இருப்பதாக சொல்லப் படுகிறது.

குசேலர் விடுதலை

சென்னை, மே 2—பிரதாபச் சந்திரன் கொலை வழக்கு செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

தலைமை செஷன்ஸ் நீதிபதி ஏ. சிதம்பரம் இந்த வழக்கை 21—6—74-க்கு தள்ளி வைத்தார்.

குற்றஞ் சாட்டப்பட்டுள்ள குசேலர் உள்ளிட்ட 7 பேரையும் ஜாமீனில் விடுதலைசெய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

தி.மு.க. நிர்வாகிகள் தேர்வு

மாயூரம், மே. 2—மாயூரம் ஒன்றிய திமுக செயலாளராக சட்டமன்ற உறுப்பினர் என். கிட்டப்பா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவைத்தலைவராக தி. மீனாட்சிசுந்தரம், துணைச் செயலாளராக எஸ். குஞ்சிதபாதம், பொருளாளராக பி. எம். அனிபா மாவட்டப் பிரதிநிதிகளாக எம். கே. ரகுபதி, ஜி. கே. மூர்த்தி, ஞானப்பிரகாசம், இளம்பரிதி செபசங்கு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாயூரம் நகர திமுக செயலாளராக அ. செங்குட்டுவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

நகர திமுக அவைத் தலைவராக வி. சங்கையன், துணைச் செயலாளராக சொக்கலிங்கம், பொருளாளராக சுப்பிரமணியம், மாவட்டப் பிரதிநிதிகளாக சட்டமன்ற உறுப்பினர் தம்பிதேவேந்திரன், டாக்டர் சண்முகம், கோ. ரத்தினவேலு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அ. தி. மு. க. மீது ராசாராம் தாக்கு

2-ம் பக்கத் தொடர்ச்சி

மட்டும்தான்தொழிலும்சிறப்பாக நடக்கிறது; தொழிலாளர்களும் நிம்மதியாக இருக்கிறார்கள்'' என்று தாம் இந்திராவிடமே சொல்லி பாராட்டிவிட்டு வந்ததாக அவர் கூறினர்.

இங்கு, நடிகர் எம். ஜி. ஆர். கட்சியைச் சேர்ந்தவர்கள். உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாகஅறிவித்துள்ளனர் தி. மு. க. அரசு என்னென்ன காரியங்களை செய்திருக்கிறது என்பதைக்கூட தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் எழுதி வைத்திருக்கும் கோரிக்கைகளில் ஒன்று, 'விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம்செய்' என்பதாகும்.

நமது என். வி. என். தொழிலாளர் நல அமைச்சராக இருந்த காலத்தில், கார்த்திகேயன் தலைமையில் ஓர் குழு அமைத்து விவசாயி[illegible]ளுக்கான கூலிகள் நிர்ணயம் செய்யப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் மாவட்டத்துக்கு மாவட்டம் ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கேற்ப விவசாயிகளுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அறியாதவர்களை நம்[illegible] அப்பாவிகள்

இதுகூட தெரிந்துகொள்ள முடியாமல், அண்ணா பெயரால் கட்சிவைத்துக்கொண்டு நடத்துகிறார்கள். அவர்களை நம்பி அறியாமைக்கு ஆட்பட்ட தொழிலாளர்களும் போகிறார்களே என்ப[illegible]தான் வேதனைக்குரியதாக இருக்கிறது.

நாம் இங்கு மே நாளில் ஊதியத்தோடு விடுமுறை அளித்து விழா கொண்டாடுகிறோம். வேறு எந்த மாநிலத்தில் விடுமுறை கொடுத்திருக்கிறார்கள்?

பீடித் தொழிலாளர்களுக்காக, 1947 முதல் இதுவரை எத்தனையோ போராட்டங்கள் நடத்தி இருக்கிறார்கள். அத்தனை போராட்டங்களிலும் அவர்கள் பெற்ற பலன் 10 காசு கூலி உயர்வுதான். திமுக ஆட்சியில் அவர்கள் நடத்திய 20 நாள் போராட்டத்தின் பலனாக 80 காசு கூலி உயர்வு பெற்றுத்தரப்பட்டது இந்தியத் துணைக்கண்டத்திலேயே பீடித்தொழிலாளர்களுக்கு நமது மாநிலத்தில் தான் அதிக கூலி தரப்படுகிறது. அத்துடன் 1000 பீடிகளுக்கு பத்துகாசு வீதம் போனசும் தா[illegible]ப்படுகிறது.

ஆந்திராவி[illegible] கூட ரூ. 50 தான் தரப்படுகிறது; நமது மாநிலத்தில் ரூ. 4. 55 வரை கொடுக்கப்படுகிறது.

எனவே, வன்முறை தவிர்த்து, வறுமையை வென்று, தொழில்களையும் தொழிலாளர்களையும் பேணிக் காப்பதே நமது கழகத்தின் குறிக்கோளாகும்.

இவ்வாறு அமைச்சர் ராஜாராம் கூறினார்.

முன்னாள் கவுன்சிலர்கள் ஜாமீனி[illegible] விடுதலை:

வெளியூரில் தங்கியிருக்க நிபந்தனை

சென்னை, மே. 2— மாநகராட்சி மஸ்டர்ரோல் ஊழல் சம்பந்தமாக ஏப். 29-ந் தேதி கைதுசெய்யப்பட்ட 6 பேரையும்நிபந்தனையின்பேரில் ஜாமீனில் விடுதலை செய்ய விசேஷ நீதிபதி ஏ. சிதம்பரம் உத்தர விட்டார்.

குருவிட்டல் கோவை நகரில் தங்கியிருக்க வேண்டும். ஆதிகேசவலு, ஜம்புலிங்கம், மணிவண்ணன் மூவரும் பாண்டிச்சேரியில் தங்கியிருக்க வேண்டும். எம், எஸ். ராமச்சந்திரன் பம்பாயிலும், மோகன் ராஜ் ஆம்பூரிலும் தங்கியிருக்க வேண்டும்.

இவர்கள் தினந்தோறும் ஒருமுறை அந்தந்த ஊரிலுள்ள போலீஸ் நிலையத்திற்குச்சென்று கையெழுத்திட வேண்டும். இவ்வாறு ஜாமீன் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

நியூயார்க் பருத்தி மார்க்கெட்

நியூயார்க், மே 1—

ஆரம்ப விலை	65·80
முடிவு விலை	64·53

இந்திராவின் ஈரான் விஜய பலன்

சென்னை பெட்ரோல் ஆலைக்கு அதிக எண்ணை: ஈரான் அனுப்பும்

டெஹ்ரான், மே. 2— சென்னை பெட்ரோல் ஆலைக்கு மேலும் அதிக அளவில் கச்சா எண்ணெய் சப்ளை செய்ய ஈரான் சம்மதித்துள்ளது.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, ஈரான் தேசத்திற்கு விஜயம் செய்து அந்த நாட்டு மன்னருடன் முக்கிய பேச்சு வார்த்தை நடத்தியதன் விளைவாக இந்த விஷயத்தில்உடன்பாடு ஏற்பட்டது.

ஈரான் தேச உதவியுடன் நடந்துவருகிற சென்னைபெட்ரோல் ஆலையில் உற்பத்தி சக்தியை 28 லட்சம் டன்னிலிருந்து 35 லட்சம் டன்னாக உயர்த்தவேண்டும் என்றும் இதற்குத்தக்கபடி சென்னை பெட்ரோல் ஆலைக்கு அதிக அளவில் கச்சா எண்ணெயை ஈரான் சப்ளை செய்ய வேண்[illegible] என்றும் கடந்த பிப்ரவ[illegible] மாதத்தில் இந்தியாவும், ஈரானும் கூட்டாக முடிவு மேற்கொண்டன.

சென்னை பெட்ரோல் ஆலையை மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்றும் இன்னும் அதிக அளவில் இந்த ஆலைக்கு கச்சா எண்ணெயை ஈரான் சப்ளை செய்ய வேண்டும் என்றும் இப்போது உட[illegible]டு ஏற்பட்டுள்ளது.

மின்சார நிலையம்

200 மெகாவாட் உற்பத்தி சக்தி கொண்ட மின்சார நிலையம் ஒன்று ஈரானில் இந்திய நிபுணர்களின் உதவியுடன் அமைக்கப்பட வேண்டும் என்பது இந்தியா ஈரான் பேச்சுவார்த்தையில் மேறகொள்ளப்பட்ட மற்றொரு முடிவாகும். இதற்கான மின்சார யந்திரங்களை இந்தியா சப்ளை செய்யும்.

அதிக அளவில் இரும்பு மூலப்பொருளை சப்ளை செய்யும்படி இந்திராவை ஈரான் கேட்டுக்கொண்டது. ஆகவே மைசூரில் உள்ள குட்ரேமுக் இரும்புச்சுரங்க திட்ட விஸ்தரிப்பு பற்றி இரு நாடுகளிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

நவமணி
திரை உலகம்

பெண்ணுக்கு தெய்வம் கணவனு-தந்தையா?
ஏவி. எம். ராஜன்-ராகவன் மோதல்

தனது வழக்கை திறமையாக நடத்தி வெற்றி தேடிக் கொடுத்ததற்காக பிரபல வக்கீல் சந்திரசேகருக்கு பர்மா மோகனசுந்தரம் விருந்து ஏற்பாடு செய்கிருர். விருந்துக்கு வந்த வக்கீலோ விருந்து சாப்பிட மறுக்கிருர். காரணம்?

எனது மகள்களான பரிமளம், ஆனந்தி இருவரையும் விட்டுவிட்டு நான்மட்டும் தனியே சாப்பிடும் பழக்கம் இதுவரை எனக்கு இருந்ததில்லை. நாங்கள் சாப்பிடுவதில் கூட ஒரு சம்பிரதாயமே வைத்திருக்கிறேம் என்று கூறிய வக்கீல், தனக்கும் தன் பெண்களுக்குமிடையேஉள்ள பாசத்தையும், அவர்கள் மேல் தான் வைத்திருக்கும் நம்பிக்கையையும் பெருமையாக எடுத்துச் சொல்கிருர்.

இதைக் கேட்ட மோகனசுந்தரம் 'பெத்தவங்க தன் பிள்ளைகள் மேல் அன்பு பாசம் நம்பிக்கை வைக்கவேண்டியதுதான். ஆனல் பெண்கள் மேலே எல்லாமே அளவோட இருக்கணும் ஏன்னு அவுங்க என்னைக்கிருந்தாலும்ஒருநாள் தனக்கு, தெய்வம்—உலகம்—எல்லாமே புருஷன் ஒருத்தன் தான்னு சொல்லிவிட்டு புகுந்த வீட்டுக்குப் போயிடுவாங்க" என்று கூறுகிருர்.

என்னைப் பொறுத்தவரைக்கும் என் பெண்களுக்கு நான் தான் தெய்வம். அதுக்கப்புறம்தான் கணவன் என்று அடித்துக்கூறுகிருர் வக்கீல் சந்திரசேகர்.

இருவருக்கும் பெண்களுக்கு தெய்வம் கணவனு, தகப்பனு என்ற வாக்குவாதம் முற்றுகிறது. தாய் தகப்பன்தான் பெண்ணுக்கு தெய்வம்' என்று கூறி விருந்து சாப்பிடாமல் வெளியேறுகிருர் வக்கீல் சந்திரசேகர்.

இக்காட்சி ராஜம் எண்டர்பிரைசஸ் 'பரிமளம்'படத்திற்காக விக்ரம் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. வக்கீல் சந்திரசேகராக ஏவி எம். ராஜனும், பர்மா மோகனசுந்தரமாக வி எஸ். ராகவனும் நடித்தனர். எஸ். வேணு டைரக்ட் செய்தார். கதை வசனம் கற்பூரம் சிங்காரவேலன் எழுதியுள்ளார்.

வாலியின் பாடல்களுக்கு சங்கர்-கணேஷ் இசையமைக்கிருர்கள்.

'பாய்மரம்' நாடகத்தின் திரைப்பட ஆக்கம்தான் ராஜம் எண்டர்பிரைசஸின் பரிமளம்'.

ரவிச்சந்திரன், தங்கவேலு, சண்முக சுந்தரம், ஜுனியர் பாலையா, டி. கே. எஸ். சந்திரன், டி. எஸ். சேஷாத்திரி, சைமன், ஸ்ரீவித்யா, சங்கரலட்சுமி, இந்திரா தேவி, விஜய சந்திரிகா ஆகியோர் நடிக்கிருர்கள். இப்படத்தில் புதுமுகம் ஜெயலட்சுமி இரண்டாவது கதாநாயகியாக அறிமுகமாகிருர்.

'அவளுக்கு நிகர் அவளே' படத்தில் நிர்மலா.

"நான் அவனில்லை' படத்தில் ஜெமினி கணேசன், ஜெயபாரதி.

ரகசியம் பரமரகசியம்

பிரபலமான கதை வசன கர்த்தாவும் கவுரவமான டைரக்டருமான ஒருவர் தான் டைரக்ட் செய்த படத்தை இன்னெருவரை இயக்கச் செய்துவிட்டு, செட்டில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிருராம். சில சமயங்களில் கேமராவை அங்குமிங்கும் நகர்த்தி வைக்க உதவிசெய்து தனது பெருமூச்சை மிச்சமில்லாமல் விட்டு வருகிருராம்.

"தேவி கருமாரியம்மன் கண் திறக்கவில்லை. எனக்கு காலம் சரியில்லை...சார்... என்ன செய்வது!" இப்படி வேதனையுடன் வார்த்தைகளை வெளியிட்டு சோகச் சித்திரமாக நிற்கிருராம்.

"ராஜநாகம்' படத்தில் சுபா

மானியஸ்ரீ விஸ்வாமித்திரன்
(மலையாளம்)

புதுமையாக கதையமைப்பைக் கொண்ட நகைச்சுவைப் படமொன்றை மலையாள நடிகர் மது தயாரித்து டைரக்ட் செய்துள்ளார்.

மதுவுடன் ஷீலா, அடூர் பாசி, சங்கராடி, பகதூர், சோமன், ஜெயபாரதி ஆகியோர் நடித்துள்ளனர்.

சேதி தெரியுமா?

நட்சத்திரங்கள் பலர் தங்கள் பங்களாக்களில் அலங்காரமாகத்தோட்டம் அமைத்துள்ளனர் அழகுக்காக செடிகளும், கொடிகளும் வளர்க்கின்றனர். ஒரு சிலர் காய்கறிகளைப் பயிரிட்டு பலன் பெறுகின்றனர். நடிகை லட்சுமி தனது புதிய வீட்டில் பல நல்ல மூலிகைகளை வளர்த்து வருகிருர். வெறும் அழகுக்காக இடத்தை அடைத்துக் கொள்ளும் வகையில் பயனின்றி தோட்டம் அமைப்பதில் தனக்கு விருப்பமில்லை, மூலிகைச் செடிகளை வளர்ப்பதால் பலருக்கும் பயன் கிடைக்கும் என்று நடிகை லட்சுமி கூறுகிருர். தன் தாயும் தானும் மூலிகைச் செடிகள் வளர்ப்பதில் பெரும் அக்கறை காட்டி வருவதாகவும் அவர் கூறுகிருர்.

ரசிகர்கள் தகராறை தீர்த்து வைத்தது

அடியேன் சுருளிராஜன் நான்

அண்ணனு தம்பியா, படத்தில் ஜெயகுமாரி, முத்துராமன்.

ஷீலா டைரக்ட் செய்யும் படம்: சிவாஜி துவக்கி வைத்தார்

நடிகை ஷீலா டைரக்ட் செய்யும் முதல் படத்திற்கான பாடல் பதிவை ஆரம்பவிழா வன்று சிவாஜிகணேசன் துவக்கி வைத்தார்.

'அப்சரா கம்பைன்ஸ்' சார்பில் 'மதி ஒளி' சண்முகமும் மின்னலும் "யக்ஷகானம்" என்ற பெயரில் மலையாளத்தில் தயாரிக்கும் படம் இது.

இதற்கான துவக்க விழா ஏவி. எம். கலைக்கூடத்தில் நடைபெற்றது. வயலார் எழுதிய பாடலுக்கு எம். எஸ். விஸ்வநாதன் இசையமைத்தார். ஜானகி பாடினர்.

ரவிச்சந்திரன், ஷீலா மது, உமர், அடூர்பாசி, உஷா நந்தினி, ஏ. சி. திருலோக்சந்தர், ஸ்ரீதர், என். எஸ். மணியம், ஏ. பி. ராஜ், உமாபதி, அரங்கண்ணல் மற்றும் திரளான திரையுலகப் பிரமுகர்கள் துவக்க விழாவிற்கு வந்திருந்தனர்.

மேதாவியின் கதைக்கு எஸ். எல் புரம் வசனம் எழுதுகிருர். வருகிற 7ம் தேதி மைசூர் பிரமியர் ஸ்டுடியோவில் படப்பிடிப்பு துவங்குகிறது.

புதுமுகம் லீலா மீது மு. க. முத்து கொண்ட ரகசிய காதல் அம்பலம்

ராஜு அந்த ஊரில் தபால் காரனுகப் பணிபுரிந்து வருகிருன், அவனுக்குச் சாந்தியின்மீது காதல். சாந்திக்கும் ராஜுவின்மீது கொள்ளை ஆசை. ஆனல் இருவரும் தங்கள் காதலை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை. துணிந்து ராஜு தன் உள்ளத்து ஆசைகளை எல்லாம் கொட்டி சாந்திக்கு ஒரு கடிதம் எழுதி விடுகின்ருன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சாந்தியின் அப்பா வீட்டில் இல்லாத சமயம் பார்த்து அவளுடைய வீட்டிற்கு வருகிருன் ராஜு, சகந்தியைக் கண்டதும் அவனுக்கு உள்ளூரப்பயம் தான். அவள் தன்னை விரும்புகிருளோ இல்லையோ என்ற குழப்பம் அவனுக்கு.

ராஜுவைக் கண்ட சாந்தி, "இன்று ஞாயிற்றுக்கிழமையாயிற்றே. தபால் இருக்காதே" என்கிருள்.

"உன்னைப் பார்த்து விட்டுப் போகலாம்னுதான் வந்தேன்" என்கிருன் ராஜு.

"அதுதான் தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே, வந்த விஷயத்தை சீக்கிரம் சொல்லுங்கள் என் அப்பா வந்து விடுவார்" என்று துரிதப் படுத்துகிருள்.

ராஜு தான் சாந்தியின் மீது கொண்டுள்ள காதலை வெளிப்படுத்துகிருன்.

'அப்பா என் அத்தை மகனுக்கு என்னைத் திருமணம் செய்துவைக்கத் திட்டமிட்டிருக்கிருர். திருமணத்தை எப்போது வைத்துக்கொள்ளலாம் என்றுகேட்டு நேற்றுகூட என் அத்தை மகன் கடிதம் எழுதியிருக்கிருர். அவன் கூறியவைகளைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, அவனைக் கிண்டல் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் சாந்தி கூறுகிருள்.

"நீ உன் அத்தை மகனை திருமணம் செய்து கொள்ளப் போகிருயா? சம்மதம் தெரிவித்துவிட்டாயா?" என்று கேட்கிருன் ராஜு.

"என் அப்பாவின் சொல்லைத் தட்ட முடியாது" என்று சாந்தி சொன்னதும் ராஜு அதிர்ச்சியடைந்தவனுய் அந்த இடத்தைவிட்டு வெளியேறுகிருன்.

அவன் போனபின்பு, அவன் தனக்கு எழுதிய கடிதத்தை மடியில் இருந்து எடுத்து மீண்டும் படித்து அதற்கு முத்தம் கொடுக்கிருள் சாந்தி, 'வீடு தேடிவந்தவரிடம் அன்பாக இரண்டு வார்த்தை பேசாமல் அவசரப்பட்டு அனுப்பிவிட்டோமே, அவர் என்னை பற்றி என்ன நினைத்துக்கொண்டாரோ. இப்போது அவர் எங்கிருக்கிறரோ' என்று தனக்குத்தானே பேசிக்கொள்ளுகிருள்.

"நான் எங்கும் போகவில்லை, எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இங்கே தான் இருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே ஒரு செடியின் மறைவிலிருந்து வெளியே வருகிருன் ராஜு.

அவனைக் கண்டதும் நாணத்தால் தலை குனிகிருள் சாந்தி. "கடிதத்திற்குத்தான் முத்தமா? எனக்கு..." என்று கூறிக் கொண்டே அவளை அப்படியே இறுகத் தழுவிக் கொள்கிருன் ராஜு. இருவரும் இந்த உலகத்தையே மறந்துவிடுகிருர்கள்.

இந்தக் காட்சி, ஜீவாலயா மூவிஸாரின் 'திருப்பம்' என்ற படத்திற்காக பரணி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. ராஜுவாக மு. க. முத்துவும், சாந்தியாக புதுமுகம் ஸ்ரீலதாவும் நடித்தார்கள். கே. எஸ். மணி ஒளிப்பதிவைக் கவனிக்க மோகன் காந்திராமன் டைரக்ட் செய்தார்.

இப்படத்தின் கதை வசனங்களை ஏ. எஸ். முத்து எழுதியிருக்கிருர். மற்றும் இப்படத்தில் ஜெ. எம். ராணி, விஜயகுமார், கே. டி. சந்தானம், வி. எஸ். ராகவன் ஆகியவர்களும் நடிக்கிருர்கள் இப்படத்தின் மூலம் புதிய இசை அமைப்பாளர் ஆர். ராமானுஜம் அறிமுகமாகிருர்.

'நேற்று, இன்று, நாளை' படத்தில் லதா

"பரிமளம்' படத்தில் ஸ்ரீவித்யா.

'அன்பைத்தேடி' சிவாஜி கணேசனுடன் ஜெயலலிதா நிற்கிருரோ?

ரசிகர்கள் தகராறை தீர்த்துவைத்த நடிகர்

விருதுநகரில் 'சரவணு ஸ்டேஜ்' குழுவினரின் "சக்கைபோடு போடு ராஜா" நாடகம் நடந்து கொண்டிருந்தது.

நகைச்சுவை நடிகர் ஒருவர் வயோதிகர், இளைஞர், இளம்பெண் ஆகிய மூன்று வேடங்களில் நடித்து சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்தார். ரசிகர்கள் ஆரவாரம் செய்து அவரது நடிப்பை ரசித்துக் கொண்டிருந்தனர். இளைஞனுக வந்தது அவர்தான் என்று தெரிந்துவிட்டது. வயோதிகர் வேடத்தில் வந்ததும், பெண்வேடத்தில் வந்ததும் அவர்தான் என்பது சிலருக்குப் புரியவில்லை.

பெண் வேடத்தில் வருபவர்தான் அவர் என்று ஒரு ரசிகரும், வயோதிகர் வேடத்தில் வருபவர் தான் அவர் என்று மற்ருெருவரும் பந்தயம் கட்டிக்கொண்டனர். பந்தயப் பணம் எவ்வளவு தெரியுமா—

$2\frac{1}{2}$ ரூபாய்.

நாடகம் முடிந்த பிறகு கூட அவர்களுக்கிடையில் தகராறு ஓயவில்லை. இருவரும் சத்தம் போட்டபடி மேடைக்குப் போய்விட்டனர்.

நடிகர் அவர்களிடம் என்ன விஷயம் என்று கேட்டார்.

வயோதிகர் வேடத்தில் வந்ததும், பெண் வேடத்தில் வந்ததும் யார் என்று கேட்டு தங்கள் தகராறை அவர்கள் கூறினர்.

இரண்டு வேடத்திலும் நடித்தது தான்தான் என்று அந்த நடிகர் அவர்கள் தகராறைத் தீர்த்துவைத்து இருவரது பந்தயப்பணத்தையும் அவரவர்களிடம் திருப்பிக்கொடுத்து அனுப்பி வைத்தார்.

ரசிகர்களுக்கிடையில் தகராறு ஏற்படக் காரணமாக இருந்தவரும்—சமாதானம் செய்தவரும் யார் தெரிகிறதா?

(4-ம் பத்தி பார்க்க)

Printed by S. V. G. Sowrirajulu at the M. C. P. P. S. Press, No. 4, South Bank Road Madras-600028 and Published by him for the Madras Co-operative Printing and Publishing Society Ltd.

Chief Editor: S. V. G. Sowrirajulu.

Honorary Editor: N. Muthukumarasami.